**(பங்குனி 30) 2023 ஏப்ரல் 13-ம் தேதி வியாழக்கிழமை**
**காலை 11.00 மணிக்கு**
**திருவாரூர் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெறும் அப்பொழுது**
**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**
**முன்னிலை: திருமதி.செ.புவனப்பிரியா, நகரமன்ற தலைவர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| பொருள்: 1<br>திருவாரூர் நகராட்சியை முதல் நிலை நகராட்சியில் இருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை வழங்கியதற்கும், பழைய பேருந்து நிலையத்தை புனரமைப்பு செய்து விரிவாக்க பணிகளுக்கு சுமார் ரூ.6.00 கோடி நிதி வழங்கியதற்கும், திருவாரூர் நகரின் பொதுமக்கள் நலன் கருதி நவீன மார்கெட் வளாகம் பழைய பேருந்து அருகில் ரூபாய் 65.00 கோடி மதிப்பில் கட்டுவதற்கு விரைவில் ஆணை வழங்கப்பட உள்ளதற்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும் பரிந்துரை செய்திட்ட மாண்புமிகு திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய பூண்டி கலைவாணன் அண்ணன் அவர்களுக்கும் இந்நகர்மன்றத்தில் நன்றி தெரிவித்து அதனை தீர்மானமாக நிறைவேற்றிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். | 279)<br>தீர்மானிக்கப்பட்டது. |
| பொருள்: 2<br>இந்நகராட்சி 1914-ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டு 01.04.1978 முதல் முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகின்றது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 113 நாள் 30.08.2019நாளிட்ட அரசாணையில் நகராட்சிகளை வருமானத்தின் அடிப்படையில் கீழ்கண்டவாறு தரம் உயர்த்திட ஆணை வெளியிடப்பட்டுள்ளது.<br>மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற மாநில கோரிக்கை அறிவிப்பு எண்18 நாள் 30.03.2023 ல் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அதன் ஆண்டு வருமானத்தை அடிப்படையாக கொண்டும் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற காரணங்களை கருத்தில் கொண்டு நகராட்சிகளை தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>வ.எண் \| நிலை \| சராசரி ஆண்டு வருமானம்<br>1 \| சிறப்பு நிலை \| ரூ.15.00 கோடிக்கு மேல்<br>2 \| தேர்வு நிலை \| ரூ.9.00 கோடிக்கு மேல் ரூ.15.00 கோடிக்கு கீழ்<br>3 \| முதல் நிலை \| ரூ.6.00 கோடிக்கு மேல் ரூ.9.00 கோடிக்கு கீழ்<br>4 \| இரண்டாம் நிலை \| ரூ.6.00 கோடிக்கு கீழ்<br><br>இந்நகரம் திருவாரூர் மாவட்ட தலைநகரமாகும். வளர்ந்து வரும் மாவட்ட தலைநகரங்களில் திருவாரூர் நகரமும் ஒன்றாகும். திருவாரூர் நகரை ஒட்டி மத்திய பல்கலைக்கழகம், அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம் புதிதாக தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும் திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட தியாகபெருமாநல்லூர் தஞ்சை சாலையில் 11.08 ஏக்கர் பரப்பளவில் ரூ.10.26 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 27.02.2019-முதல் **"B-GRADE"** பேருந்து நிலையமாக பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.<br>தற்போது திருவாரூர் நகரம் 11.34 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. | 280)<br>அலுவலக குறிப்பு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |

மேலும் இந்நகரம் பழைய தஞ்சை மாவட்டத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ளதால் தஞ்சை மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களையும் இணைக்கும் மையப்பகுதியாக உள்ளது.

திருவாரூர் நகரில் அருள்மிகு தியாராஜ சுவாமி திருக்கோயில் சைவ சமயத்தின் தலைமை பீடமாகவும், சக்தி பீடங்களின் தாய் பீடமாகவும், பிறக்க முக்தி தரும் மூலாதார தலமாகவும் விளங்குகிறது. மேலும் ஏழு விடங்க தலங்களில் முதன்மையாகவும் பூலோக கைலாயமாகவும், பன்னிரு திருமுறைகளாலும் பாடல் பெற்ற ஒரே தலமாக விளங்குகிறது.

மேலும் கங்கையைவிட பெருமை வாய்ந்ததும் 64 தீர்த்த கட்டங்களை உடையதாக திருவாரூர் கமலாலய திருக்குளம் விளங்குகிறது.

திருவாரூர் சமயம், கலை மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்தவர்களின் மையமாகத் திகழ்கிறது. திருவிழிமிழலை, திருப்பாம்புரம், திருமீயச்சூர், திருவாஞ்சியம், தில்லைவிளாகம், திருக்கண்ணமங்கை போன்ற வரலாற்றில் பிரபலமான கோவில்கள் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. முத்துப்பேட்டை அருகே ஜாம்புவானோடையில் பழமையும், புகழும் மிக்க தர்கா அமைந்துள்ளது. கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளான தியாகராஜர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோர் திருவாரூரில் பிறந்தவர்கள். இவர்களால் இம்மாவட்டம் பெருமையும், புகழையும் அடைகிறது.

ஆசிய கண்டத்திலேயே சிறப்பு வாய்ந்த ஆழித்தேர் திருவிழா (Notified Festivel) ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இவ்விழாவில் பல மாவட்டங்களிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் பெருவாரியான பக்தர்கள் கலந்து கொள்கின்றனர்.

2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி திருவாரூர் நகராட்சியின் மக்கள் தொகை 58301 ஆகும். (இன்றைய நிலையில் (03.03.2023 Mid-year population) 64131 ஆக உள்ளது)

இந்நகராட்சியின் கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வரவு செலவு விபரம் கீழ்கண்டவாறு உள்ளது.

**வருவாய் :**

| **வ. எண்** | **நிதி** | **ஆண்டு** | | | **சராசரி (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|---|---|
| | | 2019-2020 (ரூ.இலட்சத்தில்) | 2020-2021 (ரூ.இலட்சத்தில்) | 2021-2022 (ரூ.இலட்சத்தில்) | |
| 1 | வருவாய் நிதி | 1663.33 | 1326.99 | 1483.89 | **1491.40** |
| 2 | குடிநீர் (ம) வடிகால் நிதி | 197.87 | 203.05 | 192.98 | **197.9** |
| 3 | கல்வி நிதி | 51.03 | 50.01 | 49.86 | **50.3** |
| கூடுதல் | | 1912.23 | 1580.05 | 1726.73 | **1739.6** |

தற்போது இப்பகுதியில் சுற்றுலா, வியாபாரம், வேளாண் உற்பத்தி போன்றவற்றின் வளர்ச்சியினால் நகரம் வளர்ச்சி அடைந்து வருகிறது மற்றும் நகரத்தில் புதிய மனை பிரிவுகள் அனுமதிக்கப்பட்டு புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. அதனால் கூடுதல் வருமானம் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்பதாலும் மாவட்டத்தின் பிறப்பகுதியிலிருந்து நகருக்கு வந்து செல்லும் மக்கள் எண்ணிக்கை அதிகம் உள்ளது. 2022-23-ஆண்டில் பொது சொத்து வரி சீராய்வு மூலம் வரி உயர்வு செய்யப்பட்டதன் படி ரூ.2.05 கோடி கூடுதல் வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, 01.04.1978 முதல் முதல்நிலை நகராட்சியாக உள்ள திருவாரூர் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக வருமானத்தின் அடிப்படையில் தரம் உயர்த்துவதன் மூலம்

| | |
|---|---|
| கிடைக்கப்பெறும் அரசு நிதி உதவியை கொண்டு திருவாரூர் நகருக்கு மேலும் பல வளர்ச்சி திட்டங்களை நிறைவேற்றவும் பொது மக்களுக்கு முழுமையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்கவும் வாய்ப்புகள் உள்ளன.<br>எனவே, திருவாரூர் நகராட்சியை முதல் நிலை நகராட்சியிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களுக்கும் மற்றும் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கும் கருத்துரு அனுப்பவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு<br>. மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற மாநில கோரிக்கை அறிவிப்பு எண்18 நாள் 30.03.2023 ல் நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் அதன் ஆண்டு வருமானத்தை அடிப்படையாக கொண்டும் பெருகி வரும் மக்கள் தொகை மற்றும் நகரமயமாதல் போன்ற காரணிகளை கருத்தில் கொண்டு நகராட்சிகளை தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டுள்ளதன் படியும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 113 நாள் 30.08.2019நாளிட்ட அரசாணையில் நகராட்சிகளை வருமானத்தின் அடிப்படையில் தரம் உயர்த்திட ஆணையிடப்பட்டுள்ளதாலும், தற்போது முதல்நிலையில் உள்ள திருவாரூர் நகராட்சியை தேர்வு நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட மன்றத்தில் அனுமதி வழங்கலாம் அதன்படியாக நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை மற்றும் அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களுக்கும் கருத்துரு அனுப்பிட மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண் 627/2023/சி1 | |
| பொருள்: 3<br>திருவாரூர் நகராட்சியில் பொதுநிதி 2023-24-ன் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் செயல்படுத்த அனைத்து வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உருவாகும் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம்பிரித்து நகராட்சியின் நுண்ணுயிர் உரமாக்கும் மையங்கள் (MCC) மற்றும் பொருள் மீட்பு மையங்களில் (RRC) சேர்பிக்கும் மையங்களில் ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒப்பந்ததாரர் மூலம் 3 ஆண்டு காலம் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக தினசரி உருவாகும் குப்பைகளின் அளவு வருடாந்திர அடிப்படையில் மொத்த மதிப்பீடு ரூ.416.97 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். **35295/2022/EA2-SWM-9** நாள்.10.01.2023-ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தொழில் நுட்ப அனுமதி பெறப்பட்டு 27.03.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பீடு செய்யப்பட்டது.<br><br>வ.எண் \| ஒப்பந்ததாரர் விபரம் \| ஒப்பந்தப்புள்ளி விபரம்<br>1 \| Saram Enviro Sevices Pvt ltd Chennai. \| மதிப்பீட்டை விட 1.11% குறைவு<br>2 \| The RK Company Chennai. \| மதிப்பீட்டை விட 11.78% அதிகம்<br><br>பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டியதன் முக்கியத்துவம் கருதியும் மேற்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களில் ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த மதிப்பீடு அளித்துள்ள Saram Enviro Sevices Pvt ltd, Chennai அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க அனுமதி வேண்டப்படுகிறது. | 281)<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| **ந.க.எண்**.2592/2022/**எச்**1<br><br>அலுவலக குறிப்பு:<br>1. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று Saram Enviro Sevices Pvt ltd, Chennai நிறுவனம் மதிப்பீட்டை விட 1.11% குறைவாக வழங்கிய ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதி வழங்கலாம். | |

நாள் : 13.04.2023
இடம் : திருவாரூர்

(ஓம்) செ.புவனப்பிரியா
நகரமன்ற தலைவர்
திருவாரூர் நகராட்சி